# செங்கல்பட்டு நகராட்சி

## சாதாரண கூட்டம்

### 2019ம் ஆண்டு அக்டோபர் மாதம் 30ம் தேதி பிற்பகல் 2.30 மணியளவில் செங்கல்பட்டு நகராட்சி ஆணையர் மற்றும் தனி அலுவலர் முன்னிலையில் நடைபெற்ற கூட்டம்.

---

**பொருள்.1**

செங்கல்பட்டு நகராட்சி ஆணையர் அவர்களின் 9/2019 ஆம் மாதத்திற்கான நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

**தீர்மான எண். 892 நாள் 30.10.2019**

ஆணையரின் நாட்குறிப்பு பதிவு செய்யப்பட்டது.

**பொருள்.2**

செங்கல்பட்டு நகராட்சி பொறியாளர் அவர்களின் 9/2019 ஆம் மாதத்திற்கான நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

**தீர்மான எண். 893 நாள் 30.10.2019**

பொறியாளரின் நாட்குறிப்பு பதிவு செய்யப்பட்டது.

**பொருள்.3**

செங்கல்பட்டு நகராட்சி பொது சுகாதார பிரிவில் பணிபுரியும் பணியாளர்களுக்கு இந்த வருடத்திற்கான (2019–2020) பாதுகாப்பு உபகரணங்கள்.

ரிப்லெக்டர் ஜாகெட், கையுரை, முக கவசம், கூடை, படல், துடைப்பம், பிரஷ் போன்ற அனைத்தையும் வாங்குவதற்கான தோராய செலவினம் ரூ.4,50,000 லட்சத்திற்க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு–

1. அனுமதி அளிக்கலாம்.

2. அவசர அவசியம் நிமித்தமாக மன்ற ஒப்புதலை எதிர் நோக்கி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதர்க்கு பின்னேற்ப்பு வழங்கலாம்.

**தீர்மான எண். 894 நாள் 30.10.2019**

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது

**பொருள்.4**

நகராட்சி நிர்வாக ஆணையர் மற்றும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அவர்களின் உத்திரவின் பெயரில் காய்ச்சல் பணியினை துரிதமாக மேற்கொள்ளவும் இப்பணியினை 21.09.2019 முதல் மூன்று மாதங்களுக்கு 20 DBC பணியாளர்களை கொண்டு முழு வீச்சில் செயல்படுத்திடவும் இதற்கான செலவினம் தொகை ரூ.5.76 லட்சத்தினை பொது நிதியிலிருந்து செலவு மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. ந.க.2012/எச்1/2017

அ.கு–

1. அனுமதி அளிக்கலாம்

2. அவசர அவசியத்தின் நிமித்தம் மன்றத்தின் ஒப்புதலை எதிர் நோக்கி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மான எண். 895 நாள் 30.10.2019**

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது

**பொருள்.5**

பொது சுகாதார பிரிவில் தினசரி குப்பைகளை அள்ள பயன்படுத்தப்படும் TN 19 J1812 மினி லாரிக்கு 2019–20–ம் ஆண்டிற்கு தகுதி சான்று பெற வேண்டியுள்ளதால் அதிலுள்ள பழுதுகளை சரி செய்யவும், பதிவு பெற்ற நிறுவனத்திடமிருந்து விலைபுள்ளி பெறவும் இதற்காகும் தோராய செலவினம் ரூ.2.00 லட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

பழுதின் விவரம்.

1. வாகனம் டிங்கிரிம் (ம) பெயின்டிங் செய்ய வேண்டும்.
2. நான்கு வீல் கிரிஸ்ஸ் பேக்கிங் அசம்பிலி சர்விஸ் செய்யவேண்டும்
3. எலட்ரிக்கல் ஒர்கஸ், செல்ப் மோட்டார்ஸ் சர்விஸ் செய்ய வேண்டும்
4. ஸ்டேரிங் அசம்பிலி ஓவள் ஆயிலிங் செய்ய வேண்டும்
5. வாகனம் கிளாட்ச் பிளேட் மாற்ற வேண்டும்
6. வாகனத்திற்கு டிப்பர் பிளேட்பாரம் சரி செய்ய வேண்டும்
7. வாகனம் இஞ்சின் ஆயில் சர்விஸ் செய்ய வேண்டும்
8. ஹைட்ராலிக் சர்விஸ் செய்ய வேண்டும்

அ.கு–

1. மன்றம் அனுமதி அளிக்கலாம்

2. அவசர அவசியத்தின் நிமித்தம் மன்ற ஒப்புதலை எதிர் நோக்கி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதிபெற்று நடவடிக்கை மேற்கொண்டதை அங்கிகரிக்கலாம்.

**தீர்மான எண். 896 நாள் 30.10.2019**

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது

**பொருள்.6**

செங்கல்பட்டு நகராட்சி புதிய பேருந்து நிலையத்தில் உள்ள வணிக அங்காடிங்கள் மற்றும் பேருந்து நிறுத்தம் ஆகிய இடங்கள் நல்ல ஒளி வழங்ககூடிய விளக்கு CFL17/18W Philips Handles Fitting பொருட்கள் அதற்கு தேவையான உதிரி பொருட்கள் வாங்கி பொருத்த ரூ.0.96/– இலட்சத்திற்கு மன்ற பொருள் வைக்கப்படுகிறது.

அ.கு–

1.மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண். 897 நாள் 30.10.2019**

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது

**பொருள்.7**

செங்கல்பட்டு நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.30, பிள்ளையார் கோயில் தெரு, செங்கை ராயல் சிட்டிக்கு பகுதியில் புதியதாக சிறுபாலம் அமைக்கும் பணிக்கு 28.06.2019 அன்று நடைபெற்ற நகர் மன்ற கூட்டத்தில் தீர்மான எண்.834, வழங்கபட்டதை தொடர்ந்து அப்பணிக்கு 12.09.2019 அன்று பெறப்பட்ட ஒப்பந்தபுள்ளிகளின் விவரம் பின்வருமாறு.

| வ.எண் | பணியின் பெயர் | மதிப்பீடு | ஒப்பந்ததாரர் விவரம் |
|---|---|---|---|
| 1. | செங்கல்பட்டு நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.30, பிள்ளையார் கோயில் தெருவில் உள்ள பழுதடைந்த சிறுபாலத்தை அப்புறப்படுத்தி புதிய சிறுபாலம் அமைக்கும் பணி. | ரூ.6.00 இலட்சம் | 1.K.வெங்கடேசலு 0.35% குறைவு |
| | | | 2.G.மனோகர் 0.49% அதிகம் |

குறைவாக ஒப்பந்தபுள்ளி வழங்கிய ஒப்பந்ததாரர் திரு.K.வெங்கடேசலு அவர்களுக்கு பணி உத்தரவு வழங்க மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அ.கு–

மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மான எண். 898 நாள் 30.10.2019**

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது

**பொருள்.8**

செங்கல்பட்டு நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள Flood vulnerability area (ஜெ.சி.கெ நகர், களத்துமேடு, பாரதி நகர், அண்ணா நகர், திம்மராஜகுளம், அனுமந்தபுத்தேரி, குண்டூர் ராமகிருஷ்ணா பகுதி பருவ மழை முன்னெச்சரிக்கைகாக மதிப்பீடு ரூ.3.00 இலட்சத்திற்கு 29.07.2019 அன்று தீர்மான

எண்.848, நிர்வாக அனுமதி பெறப்பட்டதை தொடர்ந்து ஒப்பந்புள்ளி 12.09.2019 கோரப்பட்டதின் விவரம் பின்வருமாறு.

| வ.எண் | பணியின் பெயர் | மதிப்பீடு | ஒப்பந்ததாரர் விவரம் |
|---|---|---|---|
| 1. | செங்கல்பட்டு நகராட்சி எல்லைக்குட்பட்ட ஜெ.சி.கெ நகர், களத்துமேடு, பாரதி நகர், அண்ணா நகர், திம்மராஜகுளம், அனுமந்தபுத்தேரி , முனிசிபல் காலனி, வரதராஜன் நகர், வேதாசலம் நகர், குண்டூர், ராகவனார் தெரு, கோகுலாபுரம், புது ஏரி போன்ற பகுதிகளில் உள்ள மழைநீர் வடிகால் வாய்களை தூர்வாரி அதை சுத்தம் செய்யும் பணி. | ரூ.3.00 இலட்சம் | 1.K.வெங்கடேசலு 0.28% குறைவு<br>2.E.சந்திரன் 0.25% அதிகம் |

குறைவாக ஒப்பந்தபுள்ளி வழங்கிய ஒப்பந்ததாரர் திரு.K.வெங்கடேசலு அவர்களுக்கு பணி உத்தரவு வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அ.கு–

மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மான எண். 899 நாள் 30.10.2019**

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது

**பொருள்.9**

செங்கல்பட்டு நகராட்சி 1 மின் கம்பியாளர் (Wire man) மற்றும் 1 மின்கம்பி உதவியாளர் (Wire man) ஆகியோர் மட்டும் தற்பொழுது பணிபுரிந்து வருகிறார்கள். இவர்கள் மூலம் வார்டு எண் 1 முதல் 6 வரையுள்ள தெருவிளக்குகள் நகராட்சி பணியாளர்களை கொண்டு பராமரிக்கவும். மேலும், இந்நகராட்சியின் 7 முதல் 33 வரையுள்ள வார்டுகளில் உள்ள தெரு விளக்குகளை பராமரிப்பு செய்ய போதுமான பணியாளர்கள் இல்லாததால் 01.12.2019 முதல் 30.11.2020 வரையில் தெருவிளக்கு பராமரிப்பு பணி மேற்கொள்ள தயாரிக்கப்பட்ட விவரம் பின்வருமாறு.

| | | |
|---|---|---|
| 1. | 40 வாட்ஸ் குழப் விளக்கு | = 2995 எண்ணிக்கை |
| 2. | 250 வாட்ஸ் சோடியம் ஆவி விளக்கு | = 448 எண்ணிக்கை |
| 3. | 85 வாட்ஸ் சி.எப்.எஸ் விளக்கு | = 334 எண்ணிக்கை |
| 4. | 90 வாட்ஸ் எல்.இ.டி விளக்குகள் | = 174 எண்ணிக்கை |
| 5. | 400 வாட்ஸ் உயர்கோபுர விளக்கு (3x6) | = 18 எண்ணிக்கை |
| | மொத்தம் | = 3969 எண்ணிக்கை |

மேற்கண்ட 7 முதல் 33 வரையுள்ள வார்டுகள் மொத்தம் 27 வார்டுகளில் உள்ள தெருவிளக்குகள் தனியார் மூலம் பராமரிக்க மதிப்பீட்டுகள் கூடிய பிரேரனை தயாரிக்கப்பட்டுள்ளது. அதற்காகும் ஒராண்டுக்கு (2019–2020) பராமரிப்பு செலவினம் ரூ.61.50/– இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி

வேண்டப்படுகிறது. மேலும் 2020–2021 ஆண்டிற்கு (19–20) ஆம் ஆண்டிற்கான மதிப்பீட்டுடன் 5% கூடுதலாக சேர்ந்து ரூ.64.58/– இலத்திற்கு பணி மேற்கொள்ளவும் மற்றும் 21–22 ஆம் ஆண்டிற்கான மதிப்பீட்ருடன் 5% கூடுதலாக சேர்ந்து ரூ.67.81/– இலட்சத்திற்கு நகராட்சி நிர்வாக ஆணையரின் அனுமதி பெற்று பணி மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

(ந.க.எண்.0446/இ1/2018)

அ.கு–

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.

2. மேற்படி செலவினத்தை நகராட்சி பொது நிதிலிருந்து (அ) திட்ட நிதி இருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மான எண். 900 நாள் 30.10.2019**

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது

**பொருள்.10**

செங்கல்பட்டு நகராட்சி சொந்தமான மாமண்டூர் தலைமை நீரேற்றும் நிலையமான பகுதியில் 1.00 இலட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட நீர்தேக்க தொட்டியில் இயக்கப்படும் 60 HP-2 Nos மோட்டார்கள் முற்றிலும் பயன்படுத்த முடியாத நிலையல் இத்திட்டம் துவங்கப்பட்டிலிருந்து 7 (அ) 8 முறைகள் பழுது நீக்கப்பட்டதன் காரணமாகவும் மேற்கண்ட மின் மோட்டார்கள் Decon நிறுவனத்திற்கு பழுது நீக்க அனுப்பட்டதில் பழுது நீக்க இயலாது என தெரிவித்ததன் அடிப்படையில் மேற்கண்ட மின்மோட்டார்கள் 60 HP, 1500 LPM X 80 ml hoad submerice vertical-2 எண்ணிக்கை புதியதாக வாங்கவும். மேலும் 300 CI பைப் லைன் மோட்டார் அருகாமையில் NON Rotin வால்வு–2 எண்ணிக்கை புதியதாக வாங்கி அமைக்க தயாரிக்கப்பட்ட உத்தேச செலவின் ரூ.5.38/– இலட்சத்திற்கு இப்பணி மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு–

1. மன்றம் அனுமதி அளிக்கலாம்

2. மேற்படி பணிக்கான செலவினத்தினை குடிநீர் நிதி (அ) பொது நிதிலிருந்து மேற்கொள்ள மன்ற ஏற்கலாம்.

**தீர்மான எண். 901 நாள் 30.10.2019**

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது

**பொருள்.11**

செங்கல்பட்டு நகராட்சிக்கு சொந்தமான திம்மாவரம் தலைமை நீரேற்றும் நிலையத்தில் உள்ள மின்மோட்டார் 30HP, 2HP மற்றும் கேபிள்கள், பம்பு வால்வுகள் மின் உதிரிகள் பழுதுகளை சரிசெய்யும் பராமரிப்பு உத்தேச செலவினம் ரூ.5.00 லட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அ.கு—

1. மன்றம் அனுமதிக்கலாம்

2. மேற்படி பணிக்கான செலவினை குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் ஏற்கலாம்.

**தீர்மான எண். 902 நாள் 30.10.2019**

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது

**பொருள்.12**

செங்கல்பட்டு நகராட்சிக்கு எல்லைக்குப்பட்ட பகுதியினை சப்கலெக்டர் ஆபிஸ் சம்ப் மோட்டார், தட்டான்மலை தெரு KK பூஸ்டர், பெரியமணிக்கார் தெரு OHT மோட்டார், பாசித் தெரு மோட்டார், வடமலை பள்ளி OHT (ரேடியோ மலை) மோட்டார், ஆகிய இடங்களில் உள்ள, மோட்டார் காயில் மற்றும் பம்பு, ஸ்டார்கள் ஆகியவற்றில் பழுது ஏற்படுவதை உடனுக்குடன் சரி செய்து இயங்கத்தில் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள ஆகும் செலவினம் ரூ.6.00 இலட்சத்திற்கு மன்ற பொருள் வைக்க வேண்டப்படுகிறது.

அ.கு—

1. மன்றம் அனுமதிக்கலாம்

2. மேற்படி பணிக்கான செலவினை குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் ஏற்கலாம்.

**தீர்மான எண். 903 நாள் 30.10.2019**

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது

**பொருள்.13**

செங்கல்பட்டு நகராட்சி எல்லைக்குட்பட்ட நகராட்சி பள்ளி வளாகங்களில் உள்ள கட்டிடங்களில் மழைநீர் சேகரிப்பு ரூ.3.00 இலட்சத்திற்கு அமைப்புகளை ஏற்படுத்த நகர மன்ற கூட்டத்தில் நிர்வாக அனுமதி கிடைக்கப்பட்டதை தொடர்ந்து இப்பணிக்கு 20.09.2019 அன்று பெறப்பட்ட ஒப்பந்தபுள்ளி களின் விவரம் பின்வருமாறு.

| வ.எண் | பணியின் பெயர் | மதிப்பீடு | ஒப்பந்ததாரர் விவரம் |
|---|---|---|---|
| 1. | செங்கல்பட்டு நகராட்சி எல்லைக்குட்பட்ட நகராட்சி பள்ளி வளாக கட்டிடங்களில் மழைநீர் சேகரிப்பு அமைப்புகள் ஏற்படுத்தும் பணி. | ரூ.3.00 இலட்சம் | 1.திரு.வெங்கடேசலு 0.93% குறைவு |

| | | | |
|---|---|---|---|
| | | | 2.திரு.சந்திரன் 1.74% அதிகம் |

குறைவாக ஒப்பந்தபுள்ளி வழங்கிய விவரம் மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

அ.கு–

மன்றம் அனுமதி வழங்கலாம்

**தீர்மான எண். 904 நாள் 30.10.2019**

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது

**பொருள்.14**

செங்கல்பட்டு நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் பருவமழை முன்னெச்சரிக்கை நடவடிக்கைகாக Devateing pump flood light, pnuming saw torchlight sand bags மற்றும் இதர பொருட்கள் வாங்கும் பணிக்கு ரூ.2.30 இலட்சத்திற்கு அன்று நடைபெற்ற கூட்டத்தில் நிர்வாக அனுமதி கிடைக்கப்பட்டதை தொடர்ந்து இப்பணிக்கு 31.10.2019 அன்று கிடைக்கப்பட்ட ஒப்பந்தபுள்ளிகளின் விவரம் பின்வருமாறு.

| வ.எண் | பணியின் பெயர் | மதிப்பீடு | ஒப்பந்ததாரர் விவரம் |
|---|---|---|---|
| 1. | செங்கல்பட்டு நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் பருவமழை முன்னெச்சரிக்கை நடவடிக்கைகாக Devateing pump flood light, pnuming saw torchlight sand bags மற்றும் இதர பணிகள் அமைக்கும் பணி | ரூ.2.30 இலட்சம் | 1.திரு.வெங்கடேசலு 0.95% குறைவு |
| | | | 2.திரு.சந்திரன் 1.55% அதிகம் |

குறைவாக ஒப்பந்தபுள்ளி வழங்கிய விவரம் மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

அ.கு–

மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மான எண். 905 நாள் 30.10.2019**

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது

**பொருள்.15**

செங்கல்பட்டு நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.33, அண்ணா நகர் பகுதியில் எல்லையம்மன் கோயில் அருகில் ஏற்கனவே உள்ள பழுதடைந்த சிறுபாலத்தை அப்புறபடுத்தி புதியதாக சிறுபாலத்தை

அமைக்க ரூ.3.40 இலட்சத்திற்கு நிர்வாக அனுமதி, கிடைக்கப்பட்டதை தொடர்ந்து அப்பணிக்கு 31.10.2019 அன்று பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளின் விவரம் பின்வருமாறு.

| வ.எண் | பணியின் பெயர் | மதிப்பீடு | ஒப்பந்ததாரர் விவரம் |
|---|---|---|---|
| 1. | செங்கல்பட்டு நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.33, அண்ணா நகர் பகுதியில் எல்லையம்மன் கோயில் அருகில் சிறுபாலம் அமைக்கும் பணி | ரூ.3.40 இலட்சம் | 1.திரு.வெங்கடேசலு 0.14% குறைவு |
| | | | 2.திரு.சந்திரன் 0.33% அதிகம் |

குறைவாக ஒப்பந்துபுள்ளி வழங்கிய விவரம் மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

அ.கு—

மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மான எண். 906 நாள் 30.10.2019**

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது

**பொருள்.16**

செங்கல்பட்டு நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு.எண்.5, சூலை ஆதிமூலம் தெரு மற்றும் சின்னரத்தின தெரு சந்துக்களில் சிமெண்ட் சாலை அமைக்கும் பணிக்கு ரூ.2.70 இலட்சத்திற்கு 28.06.2019 (திர்மானம் 836) நிர்வாக அனுமதி கிடைக்கப்பட்டுள்ளதை தொடர்ந்து 24.10.2019 அன்று பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளின் விவரம் பின்வருமாறு.

| வ.எண் | பணியின் பெயர் | மதிப்பீடு | ஒப்பந்ததாரர் விவரம் |
|---|---|---|---|
| 1. | செங்கல்பட்டு நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு.எண்.5, சூலை ஆதிமூலம் தெரு மற்றும் சின்னரத்தின தெரு சந்துக்களில் சிமெண்ட் சாலை அமைக்கும் பணி | ரூ.2.70 இலட்சம் | 1.திரு.சி.வீரபாண்டியன் 0.02% குறைவு |
| | | | 2.திருமதி.விமலாபாய் கன்ஸ்ட்ரக்ஷன் 2.84% அதிகம் |

குறைவாக ஒப்பந்துபுள்ளி வழங்கிய விவரம் மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

அ.கு—

மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மான எண். 907 நாள் 30.10.2019**

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது

**பொருள்.17**

செங்கல்பட்டு நகராட்சிக்குட்பட்ட நகராட்சி, அலுவலக கட்டிடம் மற்றும் நகராட்சிக்கு சொந்தமான கட்டிடங்களில் ரூ.2.00 இலட்சம் மதிப்பீட்டிற்கு மழைநீர் சேகரிப்பு அமைப்புகளை அமைக்கும் பணிக்கு அன்று நிர்வாக அனுமதி கிடைக்கப்பட்டதை தொடர்ந்து அப்பணிக்கு 20.09.2019 அன்று பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளின் விவரம் பின்வருமாறு

| வ.எண் | பணியின் பெயர் | மதிப்பீடு | ஒப்பந்ததாரர் விவரம் |
|---|---|---|---|
| 1. | செங்கல்பட்டு நகராட்சிக்குட்பட்ட நகராட்சி, அலுவலக கட்டிடம் மற்றும் நகராட்சிக்கு சொந்தமான கட்டிடங்களில் மழைநீர் சேகரிப்பு அமைக்கும் பணி. | ரூ.2.00 இலட்சம் | 1.திரு.வெங்கடேசலு 0.50% குறைவு |
| | | | 2.திரு.சந்திரன் 0.90% அதிகம் |

குறைவாக ஒப்பந்தபுள்ளி வழங்கிய விவரம் மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

அ.கு–

மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மான எண். 908 நாள் 30.10.2019**

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது

**பொருள்.18**

செங்கல்பட்டு நகராட்சியில் வரி மற்றும் வரியில்லா இனங்களின் வசூல் பணிகள் பதிவுகள் அனைத்தும் கணிப்பொறிகள் மூலமாகவே செய்யப்பட்டு வருகிறது. கணினி பொறிகளை அவசர அவசியம் (ம) தேர்தல் பணிகள் கருதியும் இந்நகராட்சிக்கு கணினி பொறிகள், Lap Top மற்றும் HP Printer, Key board & Mouse வாங்க உண்டான செலவினம் ரூ.4.00 இலட்சத்திற்கு மன்ற தீர்மான எண் 831 நாள் 28.06.2019–ல் அனுமதிப் பெறப்பட்டதின் பேரில் 12.09.2019 அன்று ஒப்பந்தபுள்ளி கோரப்பட்டதில் கீழ் கண்டுள்ள ஒப்பந்தபுள்ளிகளின் விவரம் வரப்பெற்றுள்ளன.

| வ.எண் | பணியின் பெயர் | மதிப்பீடு | ஒப்பந்ததாரர் விவரம் |
|---|---|---|---|
| 1. | செங்கல்பட்டு நகராட்சிக்கு தேர்தல் பணிக்காக கணினிப் பொருட்கள் Lap Top மற்றும் HP Printer, Key board & Mouse ஆகிய பொருட்கள் வாங்கும் பணி | ரூ.4.00 இலட்சம் | 1.In com Solution 0.18% less |
| | | | 2.Sri Data Solution 0.75% More |

குறைவாக ஒப்பந்துபுள்ளி வழங்கிய விவரம் மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

அ.கு–

மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மான எண். 909 நாள் 30.10.2019**

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது

**பொருள்.19**

செங்கல்பட்டு நகராட்சியில் கணினி பிரிவில், கணினி மற்றும் பிரிண்டர்களுக்கு 2019–20 ஆம் ஆண்டில் பராமரிப்பு செய்வதற்கு உண்டான செலவினம் ரூ.3.00 இலட்சத்திற்கு மன்ற தீர்மான எண்.830 நாள்.28.06.2019 –ல் அனுமதிப் பெறப்பட்டதின் பேரில் 25.09.2019 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ் கண்டுள்ள ஒப்பந்தப்புள்ளிகளின் விவரம் வரப்பெற்றுள்ளன

1. M/S SRT Data Solutions + 27.87/– அதிகம்
2. M/S In com Solutions – 1.50/- குறைவு

மேற்கண்ட 2 ஒப்பந்தப்புள்ளியில் In com Solution நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளி குறைவாக உள்ளதால், இதனை ஏற்று பணி உத்தரவு வழங்க மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது. மற்ற நிறுவனத்தின் வைப்பு தொகை திரும்ப வழங்கவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு–

மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மான எண். 910 நாள் 30.10.2019**

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது

**பொருள்.20**

நகராட்சி நிர்வாக ஆணையர், நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் மற்றும் மாவட்ட ஆட்சியர் காஞ்சிபுரம் அவர்களின் உத்திரவின் பேரில் செங்கல்பட்டு நகராட்சிக்குட்பட்ட பகுதிகளின் பொது மக்களை டெங்கு பாதிக்கா வண்ணம் முன்னேற்பாடு நடவடிக்கைகளை நகராட்சி ஆணையர் மற்றும் நகர் நல அலுவலர் மூலம் போர்கால அடிப்படையில் பொது சுகாதார பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இப்பணியினை (அக்டோபர்) 2019 முதல் மூன்று மாதங்களுக்கு (டிசம்பர் 2019 வரை) 70 DBC பணியாளர்களை கொண்டு முழு விச்சில் செயல்படுத்திடவும் இதற்கான செலவினம் தொகை ரூ.19 இலட்சம் பொது நிதியிலிருந்து செலவு மேற்கொள்ளளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு–

1. அனுமதி அளிக்கலாம்

2. அவசர அவசியத்தின் நிமித்தம் மன்றத்தின் ஒப்புதலை எதிர் நோக்கி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மான எண். 911 நாள் 30.10.2019**

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது

**பொருள்.21**

இந்நகராட்சியின் 2018–19 ம் ஆண்டு, ஆண்டுகளுக்கு முடித்து நகராட்சி நிர்வாக ஆணையர், நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், உள்ளாட்சி நிதி தணிக்கை துறைக்கு அனுப்ப Journal Book, teadger, Trial Balance மற்றும் Annual Account எடுத்து சரிபார்த்து போட்டு தரவும், அதனை பிரிண்ட் செய்து தர உள்ளூர் சாஃப்ட்வேர் நிறுவனத்தில் செய்துக்கொள்ளவும், அதற்கான விலைப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்ட மூன்று விலைப்புள்ளி பெறப்பட்டுள்ளது.

1. M/S G soft system, செ–32 – ரூ.90,000/–
2. JB soft system, செ–15 – ரூ.91,500/–
3. Cursor solution, செ–20 – ரூ.92,500/–

மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

அ.கு–

1. வரப் பெற்ற மூன்று விலைப்புள்ளி M/S G-Soft system செ–32 குறைவாக வரப் பெபறறதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

2. அவசர அவசியம் கருதி தனி அலுவலர் அவர்கள் முன் அனுமதி பெற்று உத்திரவு வழங்கி நடவடிக்கை மேற்க்கொண்டதற்கும், அதற்கான செலவினத்திற்கும் மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.
(ந.க.எண்.3579/2019/H1)

**தீர்மான எண். 912 நாள் 30.10.2019**

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது

**பொருள்.22**

வடகிழக்கு பருவ மழை தற்போது துவங்க உள்ள நிலையில் நகராட்சின் குப்பை கிடங்கில் உள்ள குப்பைகளில் ஈ தொல்லைகள் அதிகமாக ஆரம்பித்துள்ளது. மக்கும் குப்பையை கையாளும் பசுமை உரக்குடிலில் ஈ மருந்து வைத்தாலும் எவ்வித பயனும் இல்லை எனவே இதற்கான ஈ மருத்தினை சுமார் 20 லிட்டர் வாங்கி பயன்படுத்தவும் அதற்கான தோராய செலவினம் ரூ.45000/– க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு–

1. மன்றம் அனுமதி அளிக்கலாம்

2. அவசர அவசியத்தின் நிமித்தம் மன்ற ஒப்புதலை எதிர் நோக்கி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதை அங்கிகரிக்கலாம்.

**ஆணையாளர் / தனி அலுவலர்**
**செங்கல்பட்டு நகராட்சி**